# என்னை அழைத்தார் இறைவன்

என்னை அழைத்தார் இறைவன்-தம்
அன்பினிற்கு ஓர் அருவியாக தம் ஆற்றலுக்கு ஓர் கருவியாக
என்னை அழைத்தார் இறைவன் - 2

**1**
அன்பின்றி வாழ்ந்திடில் உலகு பாலை நிலமாமே - இறைவன்
அன்பினில் வாழ்ந்திடில் என்றும் சோலை வனமாமே-இந்த
அன்பு ஒன்றுக்கே சாட்சியாகவே பேச வாழ நடக்க
என்னை அழைத்தார் இறைவன்.

**2**
தீமையின் ஆற்றல் ஓங்க நன்மை தோற்றிடுமோ - நன்மை
ஓங்கிட வேண்டும் என்றே நல்லார் ஏங்குகின்றார் - அந்த
தீமை மீதிலே வெற்றி கொள்ளவே நன்மை நாளும் நிலைக்க
என்னை அழைத்தார் இறைவன்.